**வருகின்ற 2018-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

1. பவானி நகராட்சியில் பராமரிக்கப்படும் வரும் ஏழு வாகனங்களை கழிவு நீக்கம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு வாகனத்திற்கு ரூ. 750/- வீதம் ஆய்வுக் கட்டணமாக செலுத்த வேண்டுமென அரசு தானியங்கி பணிமனை பொறியாளர், ஈரோடு அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வாகனம் ஒன்றுக்கு ரூ. 750/- வீதம் ஏழு வாகனங்களுக்கு ( 750x7 = 5250/-) ரூபாயில் ரூ. 5250/- -ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந..க.எண். 812/2018/எச்1)

2. திரு. சி. ராதாகிருஷ்ணன் த/பெ. (லேட்) செல்லவேல், என்பவர் கருணை அடிப்படையில் பணி வழங்க கோரி சென்னை உயர்நிதி மன்றத்தில் பவானி நகராட்சிக்கு எதிராக WP.NO.12640/2018 -ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராக சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு. டி. சூரியநாராயணன் அவர்களுக்கு வக்காலத்து வழங்கப்பட்டு உள்ளது. மேலும் திரு. டி. சூரிய நாராயணன் அவர்களின் கடிதம் நாள் 17.05.2018 ன்படி வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/- மற்றும் இதர வழக்கு செலவுகள் கட்டணம் ரூ. 5000/- வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. அனுமதிக்கலாம்.
2. வழக்கறிஞர் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் ரூ. 15000/- ஐ வருவாய் நிதியில் இருந்து அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வழங்கியதற்கு அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 00849/2018/சி 1)

3. பவானி நகராட்சி - தொழில்வரி 25% வரிஉயர்வு செய்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் 01.06.2018 அன்று செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு அவர்கள் மூலம் தினதந்தி நாளிதழ் பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ. 6426/- Bright Advertising என்ற பெயரில் காசோலை வழங்க வேண்டியுள்ளது. மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ( ந.க.எண். 860/2018/அ1)

மன்றம் அனுமதிக்கலாம்.

4. பவானி நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனம் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பது தொடர்பாக சட்டத்திருத்தம் மேற்கொண்டதை தமிழ்நாடு மாவட்ட அரசு நாளிதழில் பிரசுரம் செய்ய அரசு கிளை அச்சகத்திற்கு தொகை ரூ.2100/- செலவிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கு ஒப்புதல் வழங்கலாம்.

5. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் காம்பேக்டர் வாகனம் TN36 AR 3744 வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் செய்து ஆயில் பில்டர் மற்றும் டீசல் பில்டர் போன்ற பணிகள் M/s. T.V.S Sudaram Iyengar & Sons Private Ltd. நிறுவனத்தில் மேற்கொள்ள வேண்டி உள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ள T.V.S Sundaram Iyengar & Sons Private Ltd நிறுவனத்தினரால் செலவின மதிப்பீடு பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. ஆயில் சர்வீஸ் செய்யும் போது பழுதான பாகங்களை மாற்றிக் கொள்ளவும், இப்பணியினை மேற்படி நிறுவனத்தில் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 35,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

6. 2017-2018-ஆம் ஆண்டுக்கான வருவாய் நிதி குடிநீர் நிதி, மற்றும் கல்வி நிதி ஆகிய மூன்று நிதிகளுக்கான தணிக்கை அறிக்கைகள், தணிக்கை குறிப்புகள் மற்றும் ஆண்டுக் கணக்குகளை நகலெடுக்கவும் (Xerox) பைண்டிங் செய்யவும் ஆகும் செலவினம் ரூ. 10,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 482/2016/பி1)

7. இந்நகராட்சியின் 2017-2018 -ம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி , குடிநீர் நிதி மற்றும் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி ஆகிய மூன்று நிதிகளுக்கான ஆண்டுக்கணக்குகளை தணிக்கைக்கு வழங்கும் வகையில் தனியரைக் கொண்டு தயாரிக்கவும் அதற்கான செலவினம் ரூ.40,000 க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 482/2016/பி1)

8. பவானி நகராட்சியில் பயன்படுத்தப்பட்டுள்ள பழைய டோனர்களை தனியார் நிறுவனத்தின் மூலம் ரீபில் செய்யப்பட வேண்டியுள்ளது. அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.5000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 1019/2018/டி2)
2. செலவுத் தொகை ரூ.5000/-க்கு வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

9. ஈரோடு மாவட்டம், பவானி நகரில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு அரசு நலதிட்ட உதவிகள் விழாவிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 13.05.2018-ம் தேதி வருகை தந்ததையொட்டி பவானி நகராட்சியின் 2017-18 -ம் ஆண்டின் திட்டப்பணிகள் குறித்த விளம்பர அறிவிப்பை கீழ்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டண விபரம்.

| வ.எண். | நாளிதழ் பெயர் | பட்டியல் எண்/ தேதி | தொகை.ரூ. |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி,ஈரோடு | ERD18192002635/13.05.2018 | ரூ.12852/- |
| | மொத்தம் | | ரூ.12852/- |

மேற்கண்ட விபரப்படி தொகையினை தினத்தந்தி நாளிதலுக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். (ந.க.எண். 820/2018/இ1)

10. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 684/2018/ சி1, நாள்: 19.04.2018-ல் பவானி நகராட்சி ஆணையாளர் பொறுப்புகளை நகராட்சி பொறியாளர் திரு.க.கதிர்வேல் அவர்கள் வகிக்குமாறு உத்திரவிடப்பட்டு உள்ளது. அதன்படி நகராட்சி பொறியாளர் திரு.க.கதிர்வேல் பவானி நகராட்சி ஆணையாளர் பொறுப்பினை 20.04.2018 பிற்பகல் முதல் கூடுதலாக கவனித்து வருகிறார். எனவே அரசாணை எண். 153 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள்: 05.12.2017ன்படி உரிய விதிமுறைகளின்படி திரு. க.கதிர்வேல் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பு அவர்களுக்கு கூடுதல் பொறுப்பு படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவுத் தொகையினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 618/2018/

சி1

11. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் தலைமை நீரேற்று நிலைய பொருத்துனர் நிலை II ( Head works Fitter Grade II) ஆக பணிபுரியும் திரு. டி. சுரேஷ்குமார் என்பவர் தனது 06.06.2018 ஆம் தேதிய விண்ணப்பத்தில் பவானி நகராட்சியில் காலியாக உள்ள குழாய் ஆய்வாளர் பணியிடத்தில் பணி மாறுதல் செய்து உத்திரவிடுமாறு கோரியுள்ளார். அன்னாரது விண்ணப்பம் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கும் பணி விதிகளில் தலைமை நீரேற்று நிலைய குழாய் பொருத்துனர் நிலை -2 பணிக்கும், குழாய் ஆய்வாளர் பணிக்கும் ஒரே தொழிற்கல்வி தகுதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாலும் இரண்டு பணியிடங்களுக்கும் ஒரே ஊதிய விகிதம் ( 5200-20200 + 2400) என்பதாலும் இதில் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்பட வாய்ப்பு எதுவும் இல்லை.

பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது 5000ற்கும் மேற்பட்ட குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோக குழாய்களை அன்றாடம் ஆய்வு செய்ய குழாய் ஆய்வாளர் பணியிடம் அவசியம் தேவைப்படுகிறது. மேலும் பவானி நகராட்சியில் குழாய் ஆய்வாளர் பணியிடம் கடந்த 24.03.2010 முதல் தொடர்ந்து காலி பணியிடமாக இருந்து வருவதால் மேற்கண்ட பணியிடத்தில் திரு. டி. சுரேஷ்குமார் தலைமை நீரேற்று நிலைய பொருத்துனர் நிலை II-ஐ குழாய் ஆய்வாளர் பணியிடத்தில் பணி மாறுதல் செய்யவும், தலைமை நீரேற்று நிலையத்தில் தற்போது போதிய அளவில் தொழிற்நுட்ப பணியாளர்கள் பணிபுரிவதால் பணி மாறுதல் செய்யப்பட்ட நாள் முதல் தலைமை நீரேற்று நிலைய குழாய் பொருத்துனர் நிலை -II ஐ ஒப்படைப்பு செய்யவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று உரிய விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0953/2018/சி1)

12. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு பணிகளுக்கு தேவைக்கேற்ப அவ்வப்போது

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | எஸ்.எஸ். கிராபிக்ஸ்,<br>11/6 விட்டல்புரி 3வது வீதி,<br>குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம். | ரூ.29.00 சதுர அடி ஒன்றுக்கு |
| 2 | எ. ரவிக்குமார்,<br>பிளக்ஸ் போர்டு சப்ளையர்,<br>601, மேட்டூர் மெயின் ரோடு, பவானி | ரூ.27.00<br>சதுர அடி<br>ஒன்றுக்கு |

விழிப்புணர்வு விளம்பர பிளக்ஸ் போர்டுகள் அமைத்து விழிப்புணர்வு பணிமேற்கொள்ள ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மானம் எண். 110, நாள்: 15.05.2018-ல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் 05.06.2018-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்திட்ட எ.ரவிக்குமாரன், பிளக்ஸ் போர்டு சப்ளையர், 601, மேட்டூர் மெயின் ரோடு, பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்..

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.311/2017/எச்1)

13. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பணிகளுக்கு விழிப்புணர்வு விளம்பர நோட்டீசுகள் 9”x12”சைசில் அச்சடித்து பொது மக்களுக்கு விநியோகிக்க ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மானம் எண்.40, நாள்: 28.02.2018-ல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் 05.06.2018-ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | ராஜகணபதி ஆப்செட் பிரிண்டர்ஸ், 37, பழனியாண்டவர் கோவில் வீதி, பவானி | ரூ.980/- (ஆயிரம் பிரதிகள் அச்சடிக்க) |
| 2 | இண்டல் ஆப்செட்,பாவடி தெரு, அந்தியூர்கார்னர், பவானி | ரூ.1,000/- (ஆயிரம் பிரதிகள் அச்சடிக்க) |

குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்திட்ட ராஜகணபதி ஆப்செட் பிரிண்டர்ஸ், பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். 2018-2019 ஆம் நிதி ஆண்டில் தேவைக்கேற்ப அவ்வப்போது மேற்படி விலைவிகிதத்தில் துண்டு பிரசுரங்கள் அச்சடித்து விழிப்புணர்வு பணிமேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 312/2017/எச்1)

14. பவானி நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள தனியார் கல்விநிறுவனக்கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு செய்ய வேண்டியுள்ளதை அரசிதழில் வெளியிட வேண்டி தொகை ரூ.2100/- செலுத்தப்பட்டு அரசு அச்சகத்திற்கு வழங்கப்பட்டது. அரசிதழ் முதன்மை பக்கத்திற்கும் சேர்த்து தொகை செலுத்த வேண்டியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மீண்டும் தொகை ரூ.2100/- அரசு அச்சகத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி முன் அனுமதி வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.487/2018/அ1)

15. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்கு 12 மெட்ரிக் டன் படிகாரம் சப்ளை செய்தல் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்: **15,** நாள்: 28.02.2018ல் ஒப்புதல் வழங்கியதன் பேரில் 22.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில். அதில் கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவுறுத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | மதிப்பீட்டின் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s.ஸ்ரீகாளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரேசன் | 2,50,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.50 % குறைவு |

| | | | |
|---|---|---|---|
| 2 | M/s.திருச்செங்கோடுஅக்ரோ இன்ஜினிரிங்க் சர்வீஸ் | 2,50,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 1.25% அதிகம் |

**அலுவலககுறிப்பு:-**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.50%** சதவீதம் குறைவாக கொடுத்த M/s.ஸ்ரீகாளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரரேசன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 900/2018/இ1)

16. பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 27 முடிய உள்ள ஆழ்குழாய் கிணறு மின் மோட்டார்கள் அதன் உபகரணங்கள் பழுது சரி செய்யும் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்: **133 ,** நாள்: 28.05 .2018ல் ஒப்புதல் வழங்கியதன் பேரில் 22.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில். அதில் கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவுறுத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | மதிப்பீட்டின் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.M.முருகேசன், ஒப்பந்ததாரர் | 5,00,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.40 % குறைவு |
| 2 | திரு.C.சின்னுசாமி, ஒப்பந்ததாரர் | 5,00,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.95% அதிகம் |

**அலுவலககுறிப்பு:-**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.40%** சதவீதம் குறைவாக கொடுத்த திரு.ஆ.முருகேசன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 900/2018/இ1)

17. பவானி நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு பழைய டோனர்களை தனியார் நிறுவனத்தின் மூலம் ரீபில் செய்யும் பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று

21.06.2018 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | QTY | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | M/s. Hareesh.IT. Solutions, 250/66-A TVK. Street, Municipal Colony, Erode. | 1 | Rs. 450/- |
| 2 | Azure,3. Nachiappa Complex 100, Nachiappa Street, Erode. | 1 | Rs.550/- |
| 3 | V.L. Computers - 74/1, Karungalpalayam Road, O.P.Kalyanamandapam(opp), Karungalpalayam,Erode. | 1 | Rs.500/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி தொகை ரூ.450/-க்கு வழங்கிய திரு. M/s ஹரிஸ் கம்ப்யூட்டர் சேல்ஸ், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண். 1019/2018/டி2).

18. பவானி நகராட்சி பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் கொசுக்களால் பரவும் டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க வீடுவீடாக சென்று கொசுப்புழு மருந்து தெளிப்பு பணி, கொசு உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து தெளிக்கும் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் அயற்பணி ஒப்படைப்பு ( Outsourcing Basis) முறை வாயிலாக தினமும் 35 Domestic Breeding Checkers பணியாளர்களை கொண்டு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 2571/2017/ஜெ1, நாள்: 23.04.2018 ஆம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக DBC பணியாளர்களை 300 HH Plan படி தொடர்ந்து பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதன் பேரில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றிற்கு ரூ. 243/- என்ற ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிட்ட அதே ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தில் தற்போது விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரரான M/s. Trust us Outsourcing Solutions Pvt.Ltd. சென்னை அவர்களின் நிறுவனம் மூலம் தினமும் 35 DBC பணியாளர்களை அயர்பணி ஒப்படைப்பு முறையில் பெற்று 21.07.2018 முதல் 30.09.2018 தேதி வரை தொடர்ந்து நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினம் ரூ.6.13 இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நோய் தடுப்பு பணியின் அவசியம் கருதியும், பொதுமக்களின் சுகாதார நலன்கருதியும் 21.07.2018 முதல் 30.09.2018 தேதி வரை 35 DBC பணியாளர்களை கொண்டு தொடர்ந்து நோய் தடுப்பு பணி மேற் கொள்ள ஆகும் செலவினத்தினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 217/2017/எச்1)

19. இந்நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்தில் தகரப்பெட்டி வைத்து வியாபாரம் செய்து கொள்ளும் உரிமம் பெறுவதற்காக 2015-16 முதல் 2017-18 ஆண்டுவரை வைப்புத் தொகை கீழ்கண்ட குத்தகைதாரர்கள் செலுத்தியிருந்தனர். 2017-18 -ம் ஆண்டு வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து 2018-19 -ம் ஆண்டிற்கு காலம் கடந்த வைப்புத் தொகைப் பதிவேட்டிற்கு எடுத்துச் செல்வதால் கீழ்கண்ட விபரப்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.ண். | குத்தகைதாரர் பெயர் | வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை |
|---|---|---|
| 1 | K.M. பழனிசாமி | 16000/- |
| 2 | K.பாபு | 16000/- |
| 3 | G. தேவராஜ் | 16000/- |
| 4 | M. செல்லவேல் | 16000/- |
| 5 | A.மூர்த்தி | 9296/- |

அலுவலககுறிப்பு: அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1707/2017/அ2)

20. பவானி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016-17 ன் கீழ் நுண் உர மையம் மற்றும் மறுசுழற்சி பொருட்கள் பிரித்தெடுத்தல் மையம் இரண்டு இடங்களில் ( வார்டு எண்கள் 4,11) கட்டும் பணிக்கு மாநிலம் முழுவதும் தினமதி தமிழ் மற்றும் ஆங்கிலம் The New Indian Express) நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டமைக்கு "Accord Advertisement Agencies, ( Dinamani) Chennai.விளம்பரபில் எண். AAA/0068/2018-19, நாள்: 15.04.2018 -ன்படி செலனத்தொகை ரூ. 86940/- ஆகும். மேற்படி செலவினத் தொகையை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1240/2016/இ1)

21. பவானி நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகள் போன்றவற்றில் உள்ள கழிப்பறைகளின் பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு Municipal Administration and water Supply ( MA.IV) Department - ன் G.O. ( MS) No. 166, Dated: 23.11.2016-ன்படி நகராட்சிக்கு பொறுப்புகள் நிர்ணயிக்கப்பட்டு உத்திரவிடப்பட்டு பள்ளியின் தூய்மை பணிகளை தனியார் சேவை வழங்குநரிடம் ( Private Service Provider ) இப்பணியினை ஒப்படைவ செய்து பணி மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள ஏதுவாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவில் தினபூமி நாளிதழில் 07.06.2018-ல் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு ரூ. 17766/- ஐ வழங்கப்பட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

22.பவானி நகராட்சி பகுதியில் தற்போது மாம்பழம், பலாபழம் மற்றும் இதர பழவகைகளின் சீசன் என்பதால் ஈக்களின் தொல்லைகள் அதிகமாக இருப்பதால் நகரின் பொது சுகாதாரத்தை பேணும் பொருட்டு ஈக்களை கட்டுப்படுத்தும் மருந்தான் Dicholorvos 76% E.C லிட்டர் மருந்தினை கொள்முதல் செய்து ஈக்களின் தொல்லைகளை கட்டுப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பொசுசுகாதார பணியின் அவசியம் கருதி 2017-18 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான லிட்டர் ஒன்றுக்கு ரூ. 765/- விலை விகிதத்தில் M/s MSP Pest Control Services, Gobichettipalayam நிறுவனத்தில் கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.34450/-ற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். /2016/எச்1)

23. ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண். 4809/2018/இ1, நாள்: 13.06.2018-ன்படி சின்னச்சாமி ஒளிரும் அமைப்பு நிறுவனர். ஈரோடு என்பவர் "ERODE" என உள்ளதை "ERODU" என பெயர் திருத்தம் செய்ய மனு செய்துள்ளார், என்றும் அதன்படி மனுதாரரின் மனுவின் மீது அரசுக்கு அறிக்கை அனுப்பும் பொருட்டு பவானி நகராட்சியின் முன்மொழிவுகள் அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி சின்னச்சாமி ஒளிரும் அமைப்பு நிறுவனத்தினர் கோரியதன் படி "ERODE" தமிழ் உச்சரிப்பான "ஈரோடு" என்பதற்கு ERODU என ஆங்கிலத்தில் எழுதுவது பொருத்தமாக இருக்கும் என்பதால் "ERODE என்பதை "ERODU" என பெயர் மாற்றம் செய்திட அரசின் பரிசீலனைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் வாயிலாக முன்மொழிவுகள் அனுப்பி வைக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண். 1171/2018/எப்1)

24. பவானி நகராட்சிக்குட்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளை முறைப்படுத்தும் சம்மந்தமாக 4.6.2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதின்படி நகராட்சிப்பகுதிகளில் முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரியும் மற்றும் நகராட்சி பகுதிகளில் சிறப்பு முகாம் நடத்துவதற்காக பவானி நகராட்சிக்குட்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் மனையை முறைப்படுத்த விற்பனை செய்யப்பட்ட மனைகளுக்கு Frame -work செய்து தரப்படும் என்றும் அதற்கு CADD Drawing Layout Sketch மற்றும் விற்பனை செய்யப்பட்ட மனையின் உரிமையாளர்களின் விவரத்துடன் நகராட்சியின் மூலம் அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்கண்ட விவரங்களை மனைப்பிரிவு மனை உரிமையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் அறிவிப்பு செய்யவும், விண்ணப்பம்

சமர்ப்பிக்கவும், விளம்பரங்கள் செய்வதற்கு பேனர்கள் மற்றும் நோட்டீஸ் அச்சடிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அங்கீகரிக்கப்பட்டது (ந.க.எண். 778/2018/எப்1)

25. இந்நகராட்சி எல்லைக்குள் நடத்தப்படும் வணிக நிறுவனங்களுக்குஅச்சம் மற்றும் அருவருக்கத்தக்க உரிமக்கட்டணம் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை உயர்வு செய்யப்பட வேண்டும். ஆனால் இந்நகராட்சியில் மேற்படி கட்டண விகிதங்கள் உயர்வு செய்து ஒன்பது வருடங்காளகிவிட்டன. மேலும் இந்நகராட்சியின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. இந்நிலையில் இந்நகராட்சியின் நிதி ஆதாரத்தை அதிகரித்து நகரின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திட ஏதுவாகவும், அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமக்கட்டணம் விகிதம் இத்துடன் இணைக்கப்பட்ட பட்டியலில் கண்ட விபரப்படி 2019-20 ஆம் நிதியாண்டு முதல் உயர்வு செய்து வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1017/2018/எச்1)

26. பவானி நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாடுகளான MCC1 மற்றும் MCC2 ஆகியவற்றின் மூலம் மக்கும் கழிவுகளைக் கொண்டு உரம் தயார் செய்ய வரைபடம் வாகனம் செல்லும் பாதைகள், தெருக்கள் BWG, CT,BT, School, Church, Temple, Dry waste collection center, Decentralized composting center Market போன்றவைகளை வரைபடத்தில் குறித்து MCC -1 க்கு தனியாகவும் MCC-2 க்கு தனியாகவும் AUTO CAD முறையில் தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

ஈரோடு PG CAD சென்டரின் இப்பணிக்கான மதிப்பீடு பெறப்பட்டத்தில் ரூ. 4950/- செலவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் தயார் செய்யவும் அதற்காகும் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(ஓம்) திரு.க.கதிர்வேல்
தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
பவானி நகராட்சி